08 10 2023 **SUNDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு காஷ்மீரில் **Maroge** சுரங்கப் பாலம் வெற்றிகரமாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

2. மீனவர்களின் குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் சாகர் பரிக்ரமா திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. சிக்கிம் வெள்ள நிலைமையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. அஜய்குமார் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

4. கர்நாடக எல்லைப்பகுதியில் நிகழ்ந்த பட்டாசு தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

5. சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டி இன்று நிறைவு பெற்றது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் **Maroge** சுரங்க இருவழி நெடுஞ்சாலைக்கான 250 மீட்டர் அணுகு பாலம் வெற்றிகரமாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் 82 கோடி ரூபாய் செலவில் **Ramban - Banihal** இடையேயான தேசிய நெடுஞ்சாலையில் 395 மீட்டர் தூரத்திற்கு இந்த சுரங்க நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**Seetharam Passi** பகுதிக்கு சிரமமின்றி செல்வதற்கு இந்தப் பாலமும், சுரங்க நெடுஞ்சாலையும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

மலைப்பாதையில் வாகனங்கள் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இந்த சுரங்க நெடுஞ்சாலை அமைந்துள்ளது என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழக மீனவர்களின் மேம்பாட்டிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு 126 கோடி ரூபாய் மதிப்பிலான கடல்பாசி திட்டத்தை கொண்டு வந்துள்ளதாக மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சாகர் பரிக்ரமா என்ற கடலோர பயணத்தின் ஒரு பகுதியாக இன்று மாலை கடலூரில் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலாவுடன் இணைந்து மீனவர்களுடன் அவர் உரையாடினார்.

அப்போது மீனவர்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் சாகர் பரிக்ரமா திட்டத்திற்கு மத்திய மீன்வளத்துறை ஏற்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சாகர் பரிக்ரமா கடலோர யாத்திரை நடத்தப்படுவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<

சிக்கிம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய இணையமைச்சர் திரு. அஜய் குமார் மிஸ்ரா இன்று பார்வையிட்டார்.

அம்மாநிலத்தில் உள்ள நாஹா பகுதியை ஆய்வு செய்த அவர், தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்றும், வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் திரு. அஜய் குமார் மிஸ்ரா தெரிவித்தார்.

சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று, மக்களுடன் உரையாடினார்.

அப்போது, தேவையான உதவிகளை செய்து தருவதாக அவர் உறுதியளித்தார்.

பொருட்களை கொண்டு செல்வதற்காக மூங்கில் மற்றும் கயிறு கொண்டு உள்ளூர் மக்கள் மேற்கொண்டு வரும் தற்காலிக பாதை கட்டமைப்பு பணிகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிலையில் சிக்கிம் வெள்ளத்தில் 9 ராணுவத்தினர் உட்பட 32 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் 122 பேர் மழை வெள்ளத்தால் காணாமல் போயுள்ளதாகவும் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இந்திய விமானப்படையினர் இவ்வாண்டு 8 நாடுகளுடன் கூட்டு ராணுவப் பயிற்சி மேற்கொண்டதாக தலைமைத்தளபதி ஏர்சீப் மார்ஷல் வி.ஆர். சௌத்ரி தெரிவித்துள்ளார்.

விமானப்படை தின நிகழ்ச்சியில், அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின் உரையாற்றிய அவர், நட்பு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயிற்சி ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்தது என்றார்.

முதல்முறையாக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இலகுரக போர் விமானங்கள் இந்த பயிற்சியில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விமானப்படையில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்கில், அக்னிவீர் விமானப்படை வீரர்களும், வீராங்கனைகளும் முதற்கட்டமாக பணியில் சேர்க்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அவர்களுக்கு தற்போது முறையாக பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய விமானப் படைக்கான புதிய அடையாளச் சின்னம் பொறித்த கொடியையும் அவர் அறிமுகம் செய்தார்.

சிறப்பாக பணியாற்றிய விமானப் படையினருக்கான பாராட்டு சான்றிதழ்களையும் திரு. வி.ஆர். சௌத்ரி வழங்கினார்.

இன்று நடைபெற்ற விமானப்படையின் அணிவகுப்பை முதல்முறையாக பெண் அதிகாரி குரூப் கேப்டன் **Shaliza Dhami** தலைமையேற்று நடத்தினார்.

அனைத்து மகளிர் கலந்து கொண்ட அணிவகுப்பு பிரிவு இதில் இடம்பெற்றிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். அக்னிவீர் வாயு திட்டத்தில் இணைந்துள்ள பெண்களும் இதில் பங்கேற்றனர்.

**>>>>><<<<<**

கர்நாடக எல்லைப்பகுதியில் அமைந்துள்ள அத்திப்பள்ளி பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசின் சார்பில் தலா 3 லட்சம் ரூபாயை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், இன்று வழங்கினார்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்து பெங்களூருவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இரண்டு பேருக்கு தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் அவர் வழங்கினார்.

இதனிடையே, கர்நாடக அரசு, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இதனை தெரிவித்த அம்மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார், இந்த விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு முதலமைச்சர் திரு. சித்தராமையா உத்தரவிட்டிருப்பதாகவும், பட்டாசு கடையின் உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் உள்ளாட்சித் துறைக்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக நகராட்சி மற்றும் நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் 200 கோடி ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளை, திறந்து வைத்த பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு மட்டும் இந்த நிதியில் 14 ஆயிரம் கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தென்தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் தூத்துக்குடி ஒரு மையமாக திகழ்கிறது என்று கூறினார்.

இங்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பர்னிச்சர் பூங்காவில், பல தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வமுடன் இருப்பதாக தெரிவித்தார். இதனால், இம்மாவட்டத்தில் தொழில் வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும் அவர் கூறினார்.

பசுமை அமோனியா திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொழில்வளர்ச்சி திட்டங்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

இஸ்ரேல் தலைநகர் **Tel Aviv** மற்றும் இந்தியா இடையேயான விமான சேவை இம்மாதம் 14ஆம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது

இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பயணிகள் மற்றும் விமானிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முன்பதிவு செய்துள்ள பயணிகளுக்கு அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பிரிவினர் நேற்று தாக்குதல் நடத்திய நிலையில் அந்த நிறுவனம் இப்பதிவினை வெளியிட்டுள்ளது.

>>>>><<<<<

லடாக் யூனியன் பிரதேசத்திற்கான தேர்தல் வாக்கு எண்ணிக்கை தற்போது கார்கிலில் நடைபெற்று வருகிறது.

லடாக் தன்னாட்சி மலைப்புற மேம்பாடு கவுன்சில் - கார்கில் தேர்தலுக்கான ஆறாம் கட்ட வாக்கு எண்ணிக்கையின் முடிவில், காங்கிரஸ் கட்சி 7 இடங்களிலும் தேசிய மாநாட்டு கட்சி 5 இடங்களிலும் பிஜேபி 2 இடங்களிலும் சுயேச்சை ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

மீதமுள்ள 11 இடங்களுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வந்த ஆசிய விளையாட்டுப் போட்டி இன்று நிறைவு பெற்றது.

இந்த நிறைவு விழா அணிவகுப்பில் தேசியக்கொடியை இந்திய ஹாக்கி அணியின் கோல்கீப்பர் **PR Shreejesh** ஏந்திச் சென்றார்.

இந்த விழாவில், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்ற வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முன்னதாக, இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் உட்பட 107 பதக்கங்களை வென்றது.

இப்போட்டியில் இந்தியா 107 பதக்கங்களை வென்றது ஒரு வரலாற்று சாதனை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த சாதனையைக் கண்டு நாடே பெருமிதம் கொள்வதாகவும், இது கடந்த 60 ஆண்டுகளில் இந்திய அணியின் சிறப்பான செயல்பாடு என்றும் கூறியுள்ளார்.

இந்த போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன் வரும் செவ்வாய்க்கிழமை பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

>>>>>END<<<<<